# இலங்கைக்கு புதிய அரசியல் அமைப்பினை
# தயாரிப்பது தொடர்பாக
# முன்வைக்கப்படும் கருத்துக்கோவை



"செயல்பாட்டு மக்கள் இயக்கம்"

1998 - பிப்ரவரி மாதம் - 4ம் திகதி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இலங்கை மக்களாகிய எமக்கு சில நூற்றாண்டு காலமாக ஆட்சி செய்த ஏகாதிபத்தியவாதிகளின் ஆட்சியில் இருந்து சுதந்திரம் கிடைக்கப் பெற்றாலும் கடந்த 50 வருட காலத்திற்குள் நாட்டு மக்கள் அனைவரும் ஒரு தேசியமாக வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இன்று எமது இயலாமைக்கு பல காரணங்கள் இருந்த போதும் உருவாக்கிக் கொண்ட சூழ் நிலைகளும் ஏதுவாக அமைந்துள்ளன.

எமது ஆட்சிக்கு ஐம்பது வருடங்களான போதிலும் வெளிநாட்டு உதவிகளைத் தவிர்த்து எமக்கு வேறு எந்த வழியும் இல்லை. எமது தலைவர்கள் எனக் கூறிக்கொள்பவர்களினதும் அவர்களின் அரசாங்கத்தின் செயற்பாடுகளினாலும் இது எமக்கு தெரிய வருகின்றது.

வறுமையில் மூழ்கி வாழ்பவர்களும் அதற்கு அடுத்ததாக இந்நிலையில் உள்ளவர்களின் தொகையும் அளப்பரியதாகும். இருந்தும் சமூக அபிவிருத்திக்கான உளப்பாங்கினை வளர்த்துக் கொள்ளத்தானேனும் தேவையான சாதகமான நிலை பற்றி இதுவரை சிந்திக்கவில்லை.

பெரும் நிதியினை செலவழித்து எமது இளம் பரம்பரைக்கு அளிக்கப்படும் கல்வி முறையினால் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்வது தொடர்பாக கவனத்திற் கொள்ளவில்லை.

எமது தலைவர்கள் எனக் கூறிக்கொள்பவர்களுக்கு தமது திறமை தொடர்பாக ஆத்ம பலம் இல்லாத காரணத்தினாலும், திறமை இன்மையாலும் ஆசியாவில் முன்னேறற்றம் கண்டுள்ள நாடுகளின் பொருளாதாரத் தரத்திற்கேனும் எமது நாட்டை முன்னேற்ற முடியவில்லை. அதுபோல் வர்த்தகம், தொழிலதிபர்கள் உருவாக்கம் வீழ்ச்சியடைவதற்கு இடம் அளித்து அதற்குப் பதிலாக அடிமடியை நிரப்பிக் கொள்பவர்களையும் கைலஞ்சம், ஊழல், மோசடி, பயங்கரவாதத்தையும் வளர்த்துள்ளனர். மனிதத் தன்மைக்கு மேலாக பொருளாசையின் வழியாகவே எமது சமூகத்தை வழிநடத்தியுள்ளனர்.

கடந்த 15 வருட காலமாக கவலைக்கு மத்தியிலும் பெறுமதிமிக்க மனித உயிர்களை அர்ப்பணித்தும் முடிவில்லாத யுத்தத்தில் நாம் ஈடுபட்டு வருகின்றோம். யுத்தமுனைக் கவலைகளுக்கு மத்தியில் போர்த்தளபாட வர்த்தகத்தின் மூலம் காளான்கள் முளைப்பது போல் கோடீஸ்வரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகிக்கொண்டிருக்கிறார்கள். இந்நெருக்கடிக்கு வழிவகுக்காத தீர்வினை உருவாக்கி இதனை மக்கள் மீது பலாத்தகாரமாகத் திணிப்பது இப்போராட்டத்தின் கவலைக்குரிய அம்சமாகும்.

கடந்த 50 வருட காலமாக இந்நாட்டின் முன்னேற்றத்திற்கு தடையாகவிருந்த காரணிகளுக்கு தீர்வினைக் காணமுடிந்தளவு புதிய அரசியல் அமைப்பை உருவாக்கி புதியதொரு ஆரம்பத்திற்கு வழிவகுப்பதே எமது கருத்தாக இருக்கின்றது.

இக்கருத்துக்கோவையின் முன்னுரையில் இவ்விடயம் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் இலங்கைவாழ் அனைத்து மக்கள் பிரிவினருக்குள்ளும் இக்கருத்துக்களும் கோட்பாடுகளும் விவாதத்திற்கும் கலந்துரையாடல்களுக்கும் எடுக்கப்பட வேண்டுமென நாம் மிகவும் எதிர்பார்க்கின்றோம்.

அதுபோல் இது தொடர்பாக மக்களின் கருத்துக்களும் முன்வைக்கப்பட வேண்டுமென நாம் எதிர்பார்க்கின்றோம். அப்போது எமது மக்களுக்கு சுதந்திரம் , நியாயம், சமத்துவம் ஆகியவற்றுடன் மக்கள் முன்னேற்றத்தை மலரச்செய்யவும், மனிதத்தன்மை வாய்ந்ததும், நிலையானதுமான அரசியலமைப்பை உருவாக்கிக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்புள்ள வாசகர்களே !**

எமது நாட்டிற்கு அவசியமான புதிய அரசியலமைப்பினை தயாரிப்பதற்கு பெரும் அவாக்கொண்டுள்ள நாம், இந் நூலில் எமது நோக்கங்களை முன்வைத்திருப்பதுடன் இதனைச் செயற்படுத்த முடியும் என்ற எதிர்பார்ப்பும் எம்மிடம் உள்ளது.

இப்புதிய அரசியலமைப்பினை தயாரிக்கும் பொழுது இறுதித் தீர்வினை எடுக்கும் மக்களிடம் இருந்து இக்காரணிகள் தொடர்பாக அவர்களது எண்ணங்களையும் கருத்துக்களையும் அறிந்து கொள்வது எமது நோக்கமாகும்.

அரசாங்கம் முன்வைத்திருக்கும் ஆலோசனைகளுக்கு மாற்று ஆலோசனைகள் முன்வைக்கப்படாத துர்ப்பாக்கிய நிலையின் கீழ் "**இக்கருத்துக் கோவையை**" வெளியிடும் அவசியம் ஏற்பட்டது. அத்துடன் பரந்துபட்ட கருத்துக்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இக் "**கருத்துக்கோவை**" மக்களிடையே பரந்துபட்ட கருத்தாக்கத்தை ஏற்படுத்தி விவாதத்திற்கு உள்ளடக்கப்படும் விதத்தில் உத்தேச அரசியலமைப்பு வடிவத்திற்கு அனுகூலமான வகையில் சுருக்கமாக கருத்துக்களை உள்ளடக்கிக் கொண்டுள்ளது. மக்கள் செயற்பாட்டு இயக்கத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ள நூல் மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

மக்கள் இதனை அவதானத்தில் எடுத்து விவாதிக்கும் பொருட்டு இதில் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்கள் மிக இலகுவாக்கப்பட்டுள்ளதுடன் முக்கிய அம்சங்களும் உள்ளடக்கப்பட்டு சிறிய கைநூலாக வெளியிடப்பட்டுள்ளது. அதனால் இது தொடர்பான கருத்துக்களை அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம்.

இந் நூலில் முன்வைக்கப்பட்டிருக்கும் கருத்துக்களினால் நாம் எதிர்பார்க்கும் மாற்றம் ஏற்பட்டால் நமது நாட்டுமக்கள் முகம் கொடுத்துள்ள இடர்கள், பிரச்சனைகள் குறையும் வாய்ப்பு உண்டு. மக்கள் உயர்ந்த நிலமை எய்வதுடன் அடிப்படையான முக்கியமான வீடயங்களைத் தவிர்த்து ஏனைய காரணிகள் மாற்றம் காண இடமளிக்கப்பட வேண்டும். எதிர் காலத்தில் ஏற்படப்போகும் மாற்றத்திற்கு ஒத்துப்போகும் விதத்தில் தயாராகுவதற்கு நாம் இவ்வாறு செய்யவேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைத்ததன் பின்பு சிறுபான்மையினர் முகம் கொடுத்துள்ள அனேகமான பிரச்சனைகள் தீர்க்கப்பட்டுவிடும். ஒரு தேசியத்திற்குள் அனைத்து மக்கள் பிரிவினரும் உள்வாங்கப்பட்டு விடுவர் இதுவே அதற்கு காரணமாகும்.

எனவே அதிகாரப்பகிர்வு எந்த அளவில் செய்யப்படவேண்டும் என்பதை மேற்குறிப்பிட்டுள்ள காரணிகளுடன் ஒப்பீட்டு ஆராய்ந்து பார்க்கவேண்டும். சிங்களம், தமிழ், முஸ்லீம், பறங்கியர் ஆகிய இனங்கள் வாழும் எமது நாட்டில் ஜனநாயகம் மென்மேலும் ஓங்குக என நாம் பிரார்த்திப்போம்.

**சுனில் அபயவர்த்தன**
**அழைப்பாளர்**
**மக்கள் செயற்பாட்டு இயக்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைமையும் மக்களும்

நோக்கம் : மக்களின் சுதந்திரம் அவர்களுக்கு உரிமையாக்கப்படுவதுடன் அதனை அவர்களிடம் இருந்து பிரிக்கமுடியாததாகும். மக்களின் நலன் கருதி நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் செயற்படாவிட்டால் தமது சுதந்திரத்தை பாவித்து இதில் தலையிடுவதற்கு மக்களுக்கு உரிமையுண்டு. நிறைவேற்று அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் போது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டால் பாரதூரமான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். அரசாங்கத்தின் நடவடிக்கைகளை அறிந்துகொள்ளும் உரிமை அடிப்படை மனித உரிமையாகும்.

உத்தேசக் கருத்து.

01. தம்முடைய சுதந்திரத்தை செயல்வடிவமாக்கவும், பொது நலன், அடிப்படை உரிமைகள் தொடர்பாக தலையீடுவதற்கு மக்களுக்கு உள்ள உரிமை அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும்.

02. இவ் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள உயர் நீதிமன்றத்தினை உருவாக்க வேண்டும்.

03. பொதுமக்களின் சட்டத்தரணி பதவியும் அவரின் கீழ் இயங்கும் திணைக்களமும் உருவாக்கப்பட வேண்டும். இந்நிறுவனம் அரச நிதியில் நடாத்தப்படுவதுடன் அரசசார்பற்ற சுயாதீன நிறுவனமாக இருத்தல் வேண்டும். பொது நலனுக்கும், அடிப்படைமனித உரிமைகளுக்கும் ஏற்றவிதத்தில் செயற்படுவதற்கு இது உருவாக்கப்படுகின்றது.

04. இவ்வாறான வீடயங்கள் தொடர்பாக முறைப்பாடு செய்யும் போது நீதியை நடைமுறைப்படுத்தும் நிறுவனம் அரச படைகள் அடிப்படை உரிமைகளை மீறியதாக நீதிமன்றம் தீர்மானித்தால் பாரதூரமான தண்டனை இயல்பாகவே கிடைக்கவேண்டும். மேல் முறையீடு செய்வதற்கும் இடமளிக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரங்களை பிரித்தல்

நோக்கம். : நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கத்துறை, நீதித்துறை அதிகாரங்களுக்கிடையில் சுயாதீனத்தை ஏற்படுத்த வேண்டுமானால் அதிகாரங்களை வரையறுக்கும் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அரச நிர்வாகத்தின் ஒரு பிரிவிற்கு மட்டும் அதிகாரம் ஒதுக்கப்படுவதை தடுப்பதற்கே இவ்வாறு செய்யப்படவேண்டும். இதனால் ஏனைய பிரிவுகளின் சுதந்திரம் பாதுகாக்கப்படும்.

உத்தேச கருத்து

01. அரச நிர்வாகப் பிரிவுகள் செயற்படும் பொழுது அதிகாரங்களை மிகவும் தெளிவாக பிரித்தல் வேண்டும்.

02. நிறைவேற்று அதிகாரம் கொண்டவருக்கு உரிமையான செயற்பாடுகளை சரிவர நிறை வேற்றுவதற்கு சட்டவாக்கத்துறையிலிருந்து பிரித்துவைத்தல் மிக முக்கியமானதாகும்.

03. அரசின் ஒவ்வோரு பிரிவும் மக்களின் நலன் கருதி செயற்படும் பொருட்டு அதற்கு இடையூறு விளைவிற்கும் விடயங்களுக்கு தடைகளும், அதிகாரத்தில் சமபலமும் ஏற்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்றுத் துறை மறு சீரமைப்பு

நோக்கம். : சுதந்திரம் கிடைக்கப்பெற்ற 50 வருட காலத்தில் பாராளுமன்றத்திற்கு எவ்விதத்திலும் பொறுப்புக்கூற கடமைப்படாத, வாக்குப்பலத்தால் நியமிக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் கீழ் கடந்த 20 வருடங்களும் கழிந்தன. இதற்கு முன் 30 வருடகாலமும் பாராளுமன்றத்திற்கு வகை கூறக்கூடிய அமைச்சரவை நிறைவேற்றதிகாரத்தை கொண்டிருந்தது. பாராளுமன்றத்திற்கு வகை கூறக் கடமைப்படாத நிறைவேற்றுனருக்கு மென்மேலும் அதிகாரங்கள் அளிக்கப்பட்டதால் கடந்த 20 வருடகாலத்தில் இவருடைய அதிகாரம் கூடியது. செயற்றிறன் மிக்க ஆட்சிக்காக எந்நேரமும் நிறைவேற்றுனர் மக்களுக்கு வகை கூறவும், பதிலளிக்கவும் கடமைப்பட்டவரா இருக்கவேண்டும். இது நன்றாக செயற்படவேண்டுமானால் சட்டவாக்கத்தினால் இதற்கு ஏதுவான தடைகளை சமபலத்திற்கு கீழ் வைத்தல் முக்கியமானதாகும்.

உத்தேச கருத்து.

01. வரையறுக்கப்பட்ட விதத்தில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை உருவாக்குதல். இதனைக் கண்காணிப்பதற்கு பாராளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்படுவதுடன் நீதி மன்றத்தின் மூலம் ஆராய்வதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும்.

02. இம்முறை செயற்படும் பொழுது நிறைவேற்று அதிகாரம் உள்ள எவருக்கும் பாராளுமன்றப் பிரதிநிதியாவதற்கு இடமளிக்கக் கூடாது

03. ஜனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படும் அமைச்சரவை பாராளுமன்றத்தின் அங்கிகாரத்தைப் பெறவேண்டும்.

04. அரச உயரதிகாரிகளை நியமிக்கும் போதும் இம்முறையைப் பின்பற்றவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இல்லையேல்*

01. முன்பிருந்த முறைக்கு திரும்பிப்போதல்(இம்முறையின் கீழ் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறும், பதில் கூறக்கூடிய சட்டவாக்கத்தின் அங்கத்தவர்களினால் அமைச்சரவை அமைக்கப்படும்.

02. இம்முறையின் கீழ் அனைத்துப் பாராளுமன்ற பிரதிநிதிகளும் சட்டத்திற்கு சமமானாலும் மிகவும் நிறைவேற்றதிகாரம் கொண்டவர் இருப்பதால் இவர்களுக்கு சுதந்திரமாக செயற்படும் உரிமை அற்றுப்போகுமென முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டும்.

03. அமைச்சரவையை பாரளுமன்றத்தினால் கண்காணிக்க இடமளிக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற மறுசீரமைப்பு

நோக்கம் : பாராளுமன்ற அங்கத்தவர்கள் மக்களால் தெரிந்தெடுக்கப்படுவதுடன் மக்களின் கருத்து இதிலிருந்து பிரதிபலிக்கின்றது. மக்களின் நலன் கருதி இது செயற்பட வேண்டும். பாராளுமன்றம் அரச நிர்வாகத்தில் ஒரு பிரிவென்ற காரணத்தினால் நிறைவேற்று அதிகாரத்தில் இருந்து இது சுதந்திரமாக இயங்கவேண்டும். தேசிய நிதி பாராளுமன்றத்தின் பொறுப்பில் இருக்கவேண்டும். நிறைவேற்றுனரைக் கண்காணிப்பதற்கு பாராளுமன்றம் குழுவாக பரிவர்த்தனை அடைய வேண்டும். முன்னேற்றகரமான பாராளுமன்ற முறைக்கு அடிக்கல்லாக இருப்பதற்குத் தேவையான தடைகளையும், சமபலத்தினையும் உருவாக்குவதற்கு பாராளுமன்றக் குழுவில் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் உள்ளடக்கப்படவேண்டும்.

## உத்தேசக் கருத்துக்கள்.

01. (சிற்சில நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு) தனது மனச்சாட்சிக்கு ஏற்ப செயற்படுவதற்கு பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு சுதந்திரம் இருக்கவேண்டும்.

02. நிறைவேற்றுனரின் நடவடிக்கைகளை பாராளுமன்றம் நிச்சயமாக கண்காணிக்க வேண்டும்.

03. அமைச்சகளும், நிறைவேற்றுத் துறையில் பங்குகொள்பவர்களும் குழுவின் அங்கத்தவராக இருக்கமுடியாது.

04. அமைச்சர்களும் உயரதிகாரிகளும் இக்குழுவிற்கு வகைகூறவேண்டும்.

05. ஒவ்வொரு அமைச்சின் நடவடிக்கைகளைத் தேடிப்பாப்பதற்கு ஒவ்வொரு குழு நியமிக்கப்படவேண்டும். உயர் பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்களை தேடிப்பார்த்து அனுமதி அளிக்க தனித்தனியான குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. பாராளுமன்ற நிதிக்குழு தனது கணக்குப் பரிசோதனையை நிறைவேற்றி வருடாந்த அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

07. தற்பொழுது பாராளுமன்றத்தில் இருக்கும் வரப்பிரசாதங்களை மீளாய்வு செய்தல் வேண்டும்.

## நீதித் துறை மறு சீரமைப்பு

நோக்கம் : அர்த்தமுள்ள ஜனநாயகம் நிலவ வேண்டுமானால் நீதித் துறை சுயாதீனமாக இயங்க உறுதிசெய்யப்படவேண்டும். நீதித்துறையின் மூலம் நியாயம் நிலைநாட்டப்பட நாட்டுப் பிரஜைகளுக்கும் அரசிற்குமிடையில் இது உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். இத்துடன் எமது சமூகம் மதிப்பளிக்கும் ஜனநாயக மூல தர்மத்தை நீதித் துறை பாதுகாக்க வேண்டும்.

சம்பிரதாய சட்டங்கள் மூலம் எமது நாட்டில் வாழும் அனேகமான மக்களுக்கு நியாயம் கிடைப்பதில்லை. சட்டத்தைப் பாதுகாப்பதும் உறுதிப்படுத்துவதும் எல்லோரது கடமையாகும்.

மக்கள் நீதித்துறைமூலம் தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும், நீதி மன்றத்திற்கு இலகுவாகச் செல்லக்கூடிய விதத்தில் உதவிகளை விரிவுபடுத்த வேண்டும். ஒரு பிரஜை நீதிமன்றத்திற்கு செல்லுவதற்குள்ள உரிமை அடிப்படை மனித உரிமைகளில் முதலாவதாகும். நீதித்துறையால் தனக்கு நியாயம் கிடைக்காவிட்டால் மக்களுக்கு வேறுவழியினை நாட உள்ளாக்கப்படுவர்.

அடிப்படை உரிமைகளை அரசியலமைப்பில் உள்ளடக்கினால் மாத்திரம் போதாது. மக்களுக்கு இவ்வுரிமையை பாதுகாக்க சட்டத்தின் முன்னால் செல்லும் உரிமை உத்தரவாதப்படுத்தப்படவேண்டும். நீதித்துறை செயற்பாடுகள் தாமதமாவதைத் தவிர்ப்பதற்கு நிர்வாகத்தைப் பன்முகப்படுத்தப்படவேண்டும். அப்பொழுதுதான் எமது நாட்டு இலட்சக்கணக்கான மக்கள் ஜனநாயக உரிமையை அனுபவிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தேச கருத்துக்கள்.

01. உயர் நீதிமன்றத்திற்கு நியமிக்க ஆலோசிக்கப்படும் அனைத்து நீதிபதிகளின் பெயர்கள் சட்டவாக்கத்துறையின் அனுமதியைப பெறவேண்டும்.

02. பொதுமக்கள் தொடர்பான காரணிகளை தீர்மானிப்பதற்கு உயர் நீதிமன்றம் ஒன்றினை அமைக்க வேண்டும்.

03. தவறான செயல்களுக்கு பாத்திரமான மக்களுக்கு சட்டத்தின் நிவாரணத்தைப் பெறுவதற்கு இலகுவாக பொதுமக்கள் சட்டத்தரணி நிறுவனத்தை உருவாக்க வேண்டும். இந் நிறுவனம் அரச செலவில் நடத்தப்படுவதுடன் இது சுயாதீனமாக செயற்படவேண்டும்.

04. பொலிஸ் முப்படை அதிகாரிகளுக்கு எதிராகத் தொடுக்கப்படும் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குகள் உயர் நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்தல், முழுமையான நீதிபதிகள் அடங்கிய சபையின் முன்னால் மேன் முறையீடு செய்ய வசதி செய்தல்.

05. நீதிச்சேவை ஆணைக்குழுவில் நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள் இருவர், மேன் முறையீட்டு நீதிமன்றத் தலைவர் ஆகியோர் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

06. தன்னுடைய சுதந்திர உரிமைகளை நடைமுறைப்படுத்தும் போது அனைத்துப் பிரஜைகளுக்கும் தமக்கு எதிராக நிறைவேற்றுனராலோ அரச அதிகாரிகளாலோ தமது எண்ணத்திற்கு இடையூறு விளைவித்தால் அதற்குத் தடையுத்தரவை அல்லது இடைக்காலத் தடையுத்தரவை, நிரந்தர தடையுத்தரவை பெறக்கூடியதாக இருக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகார பகிர்வு

நோக்கம் : மத்திய அரசாங்கத்தின் மூலம் எடுக்கப்படும் தீர்மானங்களை தீர்மானிக்கும் சக்தி சிறுபானமையினருக்கு இல்லாத காரணத்தினால் இப்பொழுது இருக்கும் நெருக்கடி எழுந்துள்ளது என்பது எமது நம்பிக்கையாக இருப்பதுடன் இன்றுவரை மாறிமாறி வந்த அரசுகள் மேற்குறிப்பிட்டுள்ள பிரச்சனைகளுக்கு மாற்று நடவடிக்கை எடுக்காததால் நிலைத்திருக்கக் கூடிய தீர்வினை ஏற்படுத்தவும் இவர்களால் இயலாமற் போனது.

மத்திய, மாகாண நிர்வாகத்தில் சிறுபான்மையினா் அா்த்தமுள்ள விதத்தில் பங்கு கொள்ளவும் பிரதிபலன் தரக்கூடிய விதத்தில் இணக்கப்பாட்டினைக் காணவும் நாம் சிந்திக்கின்றோம். தேசியம் ஒன்றினை நிர்மாணிக்கும் பொழுது அவர்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படும் என நம்பிக்கை கொள்கிறோம்.

உத்தேச கருத்துக்கள்.

01. நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கத்துறை என்பவற்றின் நடவடிக்கைகளுடன் முன்பு குறிப்பிட்டுள்ள ஆலோசனைகளும் கவனத்தில் எடுக்கப்பட்டு, பாராளுமன்றத்திற்குள் வட, கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவம் செய்யும் பிரதிநிதிகளாலும் பொதுவான அங்கத்தவர்கள் அடங்கிய குழு ஒன்றினை வட, கிழக்கிற்காக அமைக்க வேண்டும் என ஆலோசிக்கின்றோம்.

02. வட, கிழக்கிற்காக அமைக்கப்படும் பாராளுமன்ற சபையின் மூலம் எடுக்கப்படும் அனைத்து ஆலோசனைகளும் பாராளுமன்ற இரண்டாவது சபை மூலம் ஆராய்ந்ததன்பின்பு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

03. உருவாக்க உத்தேசித்துள்ள மாகாண/பிராந்திய ஏனைய உள்ளூராட்சி அமைப்புக்கள் அவசியமா என மீளாய்வு செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அல்லது*

01. மாகாண/பிராந்திய அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மாகாண/பிராந்திய நிர்வாகத்தை ஏற்படுத்தல்.

02. ஒப்படைக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்கு மாத்திரம் சட்டவாக்கத்தின் அதிகாரத்தை வரையறை செய்தல்.

03. விவாதத்திற்கு எடுக்கப்படவிருக்கும் காரணிகள் மட்டும் தற்காலிகமாக பிராந்திய நிரலில் வைத்திருத்தல்.

04. பிரதேச நிறைவேற்றுனர் பாராளுமன்றக் கண்காணிப்பிற்கு கீழ்ப்படிதல்.

05. பிரதேச/ பிராந்திய நிர்வாகத்தின் மூலம் எழும் காரணிகளை தேடிப்பார்த்து அனுமதிப்பதற்காக வட, கிழக்கு ஆகிய இரு பிரதேசங்களிலும் பாராளுமன்ற அங்கத்தவர்களாலும் சமஅளவில் உருவாக்கப்பட்ட பாராளுமன்ற அங்கத்தவர்கள் அடங்கிய பாராளுமன்ற சபையை உருவாக்குதல்.

*அல்லது.*

01. மத்திய நிறைவேற்று அதிகாரத்திற்குள் இனங்களின் விகிதாசாரத்திற்கு ஏற்ப பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்துதல்.

02. பாராளுமன்றத்தில் இரண்டாவது சபையை அமைக்கும் பொழுது பொதுஇணக்கப்பாட்டுடன் உருவாக்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும்.

03. மாகாண சபைகள்/ பிராந்திய சபைகளுக்கு ஒப்படைக்கப்படும் விடயங்கள் தொடர்பாக நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்வது.

04. மாகாண/ பிராந்திய சபைகளால் உருவாக்கப்படும் சட்டங்களுக்கு மேலாக தேசிய சட்டம் இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது.

01. மேல் உத்தேசிக்கப்பட்டுள்ள விடயங்களில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட இணைப்பு.

## பொறுப்புணர்வும் பொறுப்புக் கூறக்கட்டுப்படலும

நோக்கம் : பொறுப்புணர்வுமிக்க ஆட்சியை ஏற்படுத்துவதற்கு பொதுமக்கள் வாழ்விற்கு பொறுப்புக் கூறவும் பதிலளிக்கக் கூடியதுமாக நிறைவேற்று அதிகாரம் இருக்கக் கூடிய விதத்தில் அறிமுகம் செய்யப்பட வேண்டும்

உத்தேச கருத்துக்கள்.

01. சட்டத்தின் முன்னால் அனைவரும் சமம் என்றதால் சிலபேருக்கு சட்டத்துறையால் அளிக்கப்பட்டிருக்கும் சட்டரீதியான பாதுகாப்பினை நீக்க வேண்டும்.

02. தன்னுடைய விடயங்கள் தொடர்பாக பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூற முடியாத நிறைவேற்றுனர் பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சகம்
புத்தி பிரின்டஸ் அன்ட் பப்லிகேசன்
14 A.
சோரத வீதி.
கங்கொடவில.
நுகேகொட.
தொலைபேசி இல : 074 - 301166
0722 - 75309

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org